www.Padasalai.Net www.CBSEtips.in

K

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

Reg.No.

## பன்னிரெண்டாம் வகுப்பு

## உயிரியல்

*நேரம்: 1.30 மணி* *மதிப்பெண்கள்: 45*

### பகுதி - I (உயிரி-தாவரவியல்) 23 மதிப்பெண்கள்

#### பிரிவு - அ

5 x 1 = 5

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. சிதைவுக் கூளங்கள் எளிய கரிமப் பொருட்களாக சிதைவடைதலின் போது நடைபெறும் செயல்முறை வரிசையினைக் கண்டறிக.
   I) சிதை மாற்றம் II) கசிந்தோடுதல் III) துணுக்காதல் IV) கனிமமாக்கம் V. மட்காதல்
   a) II, I, III, IV, V b) IV, V, II, III, I c) V, IV, III, II, I d) III, I, II, V, IV
2. கீழ்க்கண்டவற்றில் எது வாழிடப் பேணுகை அல்ல?
   a) மரப்பூங்கா b) தேசியப் பூங்காக்கள் c) உயிர்கோள காப்பகங்கள் d) கோவில் காடுகள்
3. கலப்பின வீரியம் குறித்த தவறான கூற்றைக் கண்டறிக.
   I. முதல் மகவுச் சந்ததியை விட பெற்றோர் செயல்திறன் பெற்றிருக்கும்.
   II. வீரியம் என்பது விளைச்சல் அதிகரிப்பு, நோய் எதிர்ப்பு திறன் வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது
   III. பொய் கலப்பின வீரியம் என்பது விளைச்சல் மற்றும் தகவமைப்பில் மட்டும் மேம்பாடு காணப்படுதல்
   IV. கலப்பின வீரியத்தினை பாதுகாக்க உடல இனப்பெருக்க முறை பயன்படுத்தப்படுகிறது
   a) I மற்றும் II b) III மற்றும் IV c) I மற்றும் IV d) I மற்றும் III
4. ஒரு தாவரமானது இருபதாயிரம் ஜுல்கள் சூரிய ஒளி உற்பத்தியாளர்களால் ஈர்க்கப்படுகிறது எனில் மூன்றாம் நிலை நுகர்வோர்கள் பெறும் ஆற்றல் எவ்வளவு?
   a) 2 Joule b) 20 Joule c) 0.2 Joule d) 200 Joule
5. கீழ்க்கண்டவற்றில் எவை சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிமுறைகள்?
   I. கார்பன் சேமிப்பு II. புதிய காடு வளர்ப்பு III. அயல்நாட்டு தாவரங்களை புகுத்துதல்
   IV. காடழிப்பு V. அப்பிக்கோ இயக்கம்
   a) I, II மற்றும் V b) I,II மற்றும் III c) I,II மற்றும் IV d) II,III மற்றும் IV

#### பிரிவு - ஆ

2 x 2 = 4

**II. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி:**

6. வாழிடப் பேணுகை, புறவாழிடப் பேணுகை - வேறுபடுத்துக.
7. பசுமைப்புரட்சி ஒரு வரமா அல்லது சாபமா? உன் கருத்துக்களை நியாயப்படுத்துக.
8. மான்ட்ரியல் மற்றும் க்யோட்டோ உடன்படிக்கையின் குறிக்கோள்கள் யாவை?
9. சூழல் மண்டலத்தை பயன்படுத்து, ஆனால் இழக்காதே - இதைப்போன்ற விழிப்புணர்வு வாசகம் ஒன்று இயற்கை அல்லது சுற்றுச்சூழல் அல்லது பசுமைக்கு செல்லுங்கள் என்ற தலைப்பில் எழுதுக.

#### பிரிவு - இ

3 x 3 = 9

**III. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 13 கட்டாய வினா)*

10. லின்டிமேன் அளித்த பத்து விழுக்காடு விதியிலிருந்து நீ அறிந்து கொள்வது என்ன?
11. உலகம் வெப்பமயமாதல், ஓசோன் இழப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அயல் தாவரங்கள் போன்ற பிரச்சனைகளுக்கு பல தீர்வுகள் நீங்கள் அறிவீர்கள். மூன்று தீர்வுகளைக் கூறுக.
12. மழை நீர் சேமிப்பின் நன்மைகளைக் குறிப்பிடுக.
13. தாவர பயிர்ப்பெருக்கத்தின் குறிக்கோள்களை எழுதுக.

#### பிரிவு - ஈ

1 x 5 = 5

**IV. ஏதேனும் ஒரு வினாவிற்கு விரிவான விடையளி:**

14. இயற்கை வேளாண்மையை எவ்வாறு வெற்றி பெறச் செய்யலாம்? உன்னுடைய நிலத்தில் நீ இதனை செயல்படுத்த உதவும் நடைமுறைகளை விவரி. *(அல்லது)*
    உன் அன்றாட வாழ்வியல் செயல்முறைகள் எவையேனும் ஐந்தினை பயன்படுத்தி - "சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் நாம் தோல்வி அடைந்தால் நம் சந்ததிகளை காப்பாற்றுவதிலும் தோல்வி அடைவோம்" எனும் கருத்தினை நியாயப்படுத்த முடியும்.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II (உயிரி-விலங்கியல்) 22 மதிப்பெண்கள்

### பிரிவு - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5 x 1 = 5

1. ஹெப்பாடைடிஸ்-B நோய்க்கான தடுப்பூசி
   a) ஒருங்கிணைந்த தடுப்பூசி b) மறுசேர்க்கை எதிர்பொருள் தடுப்பூசி
   c) கூட்டுச் சர்க்கரை தடுப்பூசி d) வாய் வழி தடுப்பூசி
2. சிவப்பு பட்டியலில் அடங்கியுள்ள விவரங்கள்
   a) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து தாவரங்கள்
   b) சர்வதேச வர்த்தக அளவிலான தாவரங்களும் அதன் தயாரிப்புகளும்
   c) அச்சுறுத்தும் இனங்கள் d) கடல் முதுகெலும்பிகள்
3. பின்வருவனவற்றுள் எந்த ஒரு காடு "புவிக்கோளின் நுரையீரல்" என்றழைக்கப்படுகிறது?
   a) பனிச்சமவெளி b) வடகிழக்கு இந்திய மழைக்காடுகள்
   c) பசுமை மாறா ஊசியிலைக்காடுகள் d) அமேசான் மழைக்காடுகள்
4. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| *கா.த.கு. எண்* | | *காற்று மாசுபாட்டின் அளவு* |
|---|---|---|
| 1. 201 - 300 | i) | ஆரோக்கியமற்றது |
| 2. 101 - 150 | ii) | மிதமானது |
| 3. 51 - 100 | iii) | மிகவும் ஆரோக்கியமற்றது |
| 4. 151 - 200 | iv) | பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு ஆரோக்கியமற்றது |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| a) | iii | ii | iv | i |
| b) | ii | iii | iv | i |
| c) | iii | iv | iii | i |
| d) | i | ii | iii | iv |

5. மறுசேர்க்கை இண்டர்ஃபெரான்கள் உற்பத்திக்கு மிகவும் பொருத்தமானது
   a) எ.கோலை b) பேசில்லஸ் சப்டிலிஸ்
   c) சாக்ரோமைசெஸ் செரிவிசியே d) ஸ்ட்ரெப்டோமைசிஸ் பைகான்ஸ்

### பிரிவு - ஆ

**II. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி:** 3 x 2 = 6

6. குறுதிறன் - வரையறு.
7. இடமாறும் வேளாண்மை (அ) உடைத்து எரித்தல் வேளாண்மை என்றால் என்ன?
8. மரபணு சிகிச்சை தொடர்புடைய உத்திகள் யாவை?
9. இந்தியாவின் உயிர்ப்புவி மண்டலங்களைப் பட்டியலிடுக.
10. சூழல் சுகாதாரக் கழிவறைகள் பற்றி உங்களுக்கு தெரிந்தவற்றை எழுதுக.

### பிரிவு - இ

**III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 12 கட்டாய வினா)* 2 x 3 = 6

11. சூழல் உள் பாதுகாப்பு மற்றும் சூழல்வெளி பாதுகாப்பு - ஒப்பிடவும்.
12. உறைதல் காரணி VIII ன் உற்பத்திக் குறைபாட்டால் ஹீமோஃபிலியா நோய் ஏற்படுகிறது. இந்நோயை சரிசெய்வதற்கான ஒரு சிகிச்சை முறையை பரிந்துரைக்கவும்.
13. உங்கள் இருப்பிடத்தில் காற்று மாசு அளவு அபாயகரமாக உள்ளது. அதை குறைப்பதற்கு என்ன கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்றுவீர்கள்?

### பிரிவு - ஈ

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளி:** 1 x 5 = 5

14. குளோனிங் (நகலாக்கம்) செயல்முறையை விவரி. *(அல்லது)*
    உயிரிய பல்வகைத் தன்மை வீழ்ச்சி ஒரு நாட்டிற்கு முக்கிய அச்சுறுத்தலாகும். அவற்றைச் சரிசெய்வதற்கு உங்களுடைய மதிப்புமிக்க காரணங்களைக் கூறவும்.

*****

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 Scanned by CamScanner